# நெருங்கிய நண்பர்கள்

சிறுவர்களாகிய எமக்கு நண்பர்கள் பலர் இருப்பினும் அவர்களுள் ஒருசிலரை எமது விசேட நண்பர்களாகத் தெரிகின்றோம். அன்று ஆண்டவர் இயேசுவுக்கும் பன்னிரண்டு விசேட நண்பர்கள் இருந்தனர்.



வேதாகமத்தில் இவர்கள் சீடர்கள் அல்லது திருத்தூதர் என அழைக்கப்படுகின்றனர். இந்தப் பன்னிருவரும் இயேசுவின் சீடர்களாகுவதற்கு முன்னர் பல்வேறு தொழில்கள் செய்தனர் எனக் குறிப்பிடப்படுகின்றது. பலர் மீனவர்களாக இருந்தனர். அவர்கள் அதனை விட்டு ஆண்டவர் இயேசுவைப் பின்பற்ற விரும்பினர்.

சீடர்கள் எப்போதும் இயேசுவுடன் கூட இருந்து அவரைப் பின் தொடர்ந்து அவருடன் சமீபித்து வாழ்ந்தனர். அவர்கள் நோயாளர்களை குணமாக்கினார்கள். அனைவரையும் நேசித்தார்கள். ஆதரவற்றோருக்கு உதவி செய்தார்கள்.

இவர்களுள் பேதுரு, யாக்கோபு, யோவான் என்ற மூவரும் அவரது மிக நெருங்கிய சீடர்களாக செயற்பட்டனர் என விளங்கிக் கொள்ளலாம்.

இயேசு எமது நண்பராக வேண்டுமானால் நாம் அவரது செயல்களைப் பின்பற்றி வாழ்வோம்.

செயற்பாடு

மத்தேயு 10: 1-4 வாசிக்கவும்.
வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய சீடர்களின் பெயர்களையும் தேடிக் கண்டு பிடிக்கவும்.